# இஸ்ரவேலே எழும்பு!

## Arise O Israel!

JESUS REDEEMS MINISTRIES

‘இயேசு விடுவிக்கிறார்’
ஊழியங்கள்

“...இஸ்ரவேலரெல்லாரும்
இரட்சிக்கப்படுவார்கள்.”
(ரோமர் 11:26)



קום, ישראל



## இஸ்ரேல் தீர்க்கதரிசன ஜெபக் கையேடு!

# உங்கள் சகோதரனிடமிருந்து...

**பிரியமானவர்களே,** உலக இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

இஸ்ரேல் தேசம் கர்த்தருடைய தேசம். கர்த்தர் இந்த தேசத்திற்காக கவலைப்படுகிறார். இந்த தேசத்திற்காக பாரப்படுகிறார். சிதறிப்போன இஸ்ரவேலர்கள் தேசத்திலே கூட்டிச் சேர்க்கப்படுவது மாத்திரமல்ல, கூட்டிச் சேர்க்கப்பட்டவர்கள் தேவனிடத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

இதற்காகவே தேவன் இஸ்ரேல் எழுப்புதல் தரிசன திட்டத்தை நம்முடைய கரங்களில் கொடுத்திருக்கிறார். இது ஒரு இராஜரீக திட்டம்.

இந்த தேசம் திரும்பும்பொழுது உலகம் முழுவதுமே அதன் சுழற்சியிலே திரும்பும். இந்த தேசத்தின் காரியங்கள் மாற்றப்படும்போது, உலகத்தின் ஒவ்வொரு தேச அரசியலிலும் ஒவ்வொரு தேசத்தின் பொருளாதாரத்திலும், செழிப்பிலும், மாற்றங்கள் உண்டாகும். கர்த்தர் இந்த தேசத்தை ஒரு அச்சாக, ஆணிவேராக, அடித்தளமாக வைத்திருக்கிறார். எனவே, உலகத்தில் மாற்றம் வர வேண்டுமென்றால், இஸ்ரேலிலே மாற்றம் வர வேண்டும்.

இதற்காக நாம் பிரயாசப்பட வேண்டும், விலைக்கிரயம் செலுத்த வேண்டும், நம்முடைய ஜெபத்தை, கண்ணீரை விதைக்க வேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை திருப்பிக் கொள்கிற காலம் வந்தது என்பதை அறிந்த பிசாசானவன், அதற்கு எதிரான கியைகளைச் செய்ய துவங்கியிருக்கிறான். அவனை மேற்கொள்ள ஒரேவழி நம்முடைய ஜெபம் மாத்திரமே.

என்னோடு இணைந்து இந்த தரினத்தை நிறைவேற்ற தோள் கொடுத்திருக்கிற உங்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். முதற்கட்டமாக நாம் அதிகமாக ஜெபிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எனவே, இஸ்ரவேலின் எழுப்புதலுக்காக தனியாக, குழுவாக, குடும்பமாக, சபையாக அதிகமாக ஜெபியுங்கள். உங்கள் ஊக்கமாக வேண்டுதலுக்கு உதவி செய்ய இந்த ஜெப கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதிலிருக்கிற அத்தனை ஜெபக் குறிப்புகளும் தேவன் வெளிப்படுத்திய தீர்க்க தரிசனத்தை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டவை.

எனவே, ஒவ்வொருநாளும் அந்தந்த நாளுக்குரிய ஜெபக் குறிப்புகளை வைத்து, ஆவியில் நிறைந்து ஜெபியுங்கள். அந்தகார ஆவிகளை கட்டுங்கள். நாம் அனைவரும் இணைந்து ஒரே காரியத்திற்காக ஒருமனதோடு ஜெபிக்கும்போது, மகிமையான மாற்றங்கள் தேசத்தில் உண்டாகும். சாத்தானின் கிரியைகள் செயலிழந்து போகும். தேவ திட்டம் சீக்கிரம் நிறைவேறும்.

உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். எனக்காக, அன்பு சகோதரர் தீர்க்கதரிசி வின்செண்ட் செல்வக்குமார் அவர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவ கிருபை நம்மோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.

(மோகன் சி. லாசரஸ்)



"...இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்." (ரோமர் 11:26)



# தரிசனம்

**நான் அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.**

அப். 26:19

**'எருசலேமின் சமாதானத்திற்காக வேண்டிக்கொள்ளுங்கள்...'** (சங்கீதம்122:6) என்று சங்கீதத்தில் எழுதி இருக்கிறபடி, கடந்த 20 வருடங்களுக்கு மேலாக ஜெபித்து வந்தோம். நான் பல முறை இஸ்ரேல் தேசத்திற்குச் சென்று வந்தபோதும்,யூதர்களின் இரட்சிப்பைக் குறித்தோ, இஸ்ரேல்தேசத்தின் இரட்சிப்பைக் குறித்தோ, இஸ்ரேல் தேசத்தின் எழுப்புதலைக் குறித்தோ எந்த எண்ணமும் எனக்கு ஏற்படவில்லை. மாறாக, யூதமக்கள் இயேசுவை புறக்கணித்துவிட்டார்கள். எனவே, அவர்களுக்கு இரட்சிப்பு கிடையாது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

ஆனால்.2015 ஆம் வருடம் எருசலேம் நகரின் கெத்சமனே தோட்டத்தில் தனிமையில் காத்திருந்து ஜெபித்துக் கொண்டிருந்தபோது நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை சந்தித்தார், அப்பொழுது எருசலேமின் சமாதானத்திற்காக ஜெபிக்கிறீர்களே, இரட்சிக்கப்படாமல் எப்படி சமாதானம்வரும்? முதலில் இஸ்ரவேலரின் இரட்சிப்புக்காக ஜெபிக்கவேண்டும் என்று பேசினார், இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்பதாக,ஒருகூட்ட இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை... **'இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்...'** (ரோமர்11:26) என்ற வேதவசனத்தின் மூலமாக ஆவியானவர் என்னோடு தெளிவாகப் பேசினார். இஸ்ரவேல் மக்கள் இயேசுகிறிஸ்துவை புறக்கணித்ததால், புறஜாதியாராகிய நமக்கு இரட்சிப்பு கிடைத்தது (ரோமர்11:11), அதேபோல். இந்த கடைசி நாட்களில் புறஜாதியாராகிய நம்மூலம் இஸ்ரேல் மக்களுக்கு இரட்சிப்பு உண்டாகும் (ரோமர்11:25.26) என்றும். இந்தபிரகாரமாக உபத்திரவகாலத்தில் ஒரு கூட்ட இஸ்ரவேலர்களும் இரட்சிக்கப்படுவார்கள் (ரோமர்11:26) என்றும் என்னோடு பேசினார்,

இயேசுகிறிஸ்துவின்வருகைக்குமுன்பாக,ஒரு கூட்டம் இஸ்ரவேலர்களும். உபத்திரவகாலத்தில் ஒருகூட்டம் இஸ்ரவேலர்களும் இரட்சிக்கப்படுவார்கள். ஆகவே, தொடர்ந்து இஸ்ரேல் மக்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்க வேண்டும் என்றும், ஒரு கூட்டம் தேவபிள்ளைகளை இஸ்ரேல் தேசத்திற்கு அழைத்துக் கொண்டுவந்து, உபவாசித்து,



இந்தமக்களின் இரட்சிப்புக்காக திறப்பிலே நிற்க வேண்டும் என்றும் கர்த்தர் திருவுளம் பற்றினார்.

எப்படி இந்த தரிசனத்தை நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டபோது. அதற்கான ஆலோசனையை கொடுத்ததுமின்றி, ஜெபிக்கின்ற மக்களையும் நானே கூட்டி சேர்ப்பேன் என்றும் கர்த்தர் வாக்குக் கொடுத்தார். தேவன் கொடுத்த வாக்கின்படி

2016 ஆம் ஆண்டு செப்டம்பர், 2017 ஆம் ஆண்டு மே, 2018 ஆம் ஆண்டு மே மற்றும் 2019 மே மற்றும் செப்டம்பர் மாதங்களில் எழுப்புதல் ஜெப சுற்றுலாக்களும்,

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எருசலேம் பட்டணத்தில் ஜெப நடையும், 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தாண் முதல் பெயர்செபா வரையில் ஜெபயாத்திரையும், 2019 நவம்பர் மாதத்தில் இஸ்ரேல் தேசத்தின் 7 மாவட்டங்களில் உபவாச ஜெபமும் ஏறெடுக்க கிருபை பாராட்டினார்

இஸ்ரேல் தேசத்தில் வாழ்கின்ற யூதர்கள் மற்றும் பாலஸ்தீனர்களின் இரட்சிப்புக்காகவும், சடங்காச்சாரத்தில் மூழ்கிக் கிடக்கின்ற கிறிஸ்தவ சபைகளில் எழுப்புதல் உண்டாகும்படியாகவும், கர்த்தர் வெளிப்படுத்திக் கொடுத்த காரியங்களுக்காகவும்,நிறைவேறப்போகின்ற தீர்க்கதரிசனங்களுக்காகவும், எழுப்புதலுக்கு தடையாய் இருக்கின்ற சத்துருவின் கிரியைகள் அழிக்கப்படவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன.

இஸ்ரவேலர் நடுவில் உண்டாகப்போகின்ற பலத்த எழுப்புதலைக் குறித்தும், சாத்தானின் தந்திரங்களைக் குறித்தும் ஆவியானவர், தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் மூலமாக அநேக இரகசியங்களை வெளிப்படுத்தி ஜெபிக்க வைத்தார்.

பரிசுத்த தேவனின் இந்த உன்னதமான திட்டத்தை நிறைவேற்றும்படி, இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த எழுப்புதல் ஜெப சுற்றுலாவிலும், உபவாச ஜெப நடை, உபவாச ஜெப யாத்திரை மற்றும் நடைபெற்ற உபவாச ஜெபங்களில் கர்த்தர் வாக்குப்பண்ணினபடியே, இதுவரை அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, இலங்கை, கனடா, ஓமன், துபாய், சிங்கப்பூர், மலேசியா, நியுசிலாந்து, ஜெர்மனி, டென்மார்க், நார்வே போன்ற 13 நாடுகளைச் சேர்ந்த ஜெபிக்கின்ற தேவ பிள்ளைகளை கர்த்தர் கூட்டிச் சேர்த்து தம்முடைய திட்டத்தை நிறைவேற்ற கிருபை செய்தார்.

இந்த எழுப்புதல் ஜெப சுற்றுலாவில் பங்கு பெற்ற பல்வேறு நாடுகளைச் சார்ந்த தேவபிள்ளைகள் ஆங்காங்கே ஜெபக் குழுக்களாகக் கூடி ஜெபிக்க ஆரம்பித்து விட்டனர்.

இஸ்ரேல் மக்களுக்காக ஜெபிப்பது மட்டுமல்லாமல் பல தேசங்களிலுமிருந்து இஸ்ரேலுக்கு திரும்பி வருகின்ற மக்களுக்கு உதவி செய்ய கர்த்தருக்குள் தீர்மானிக்கப்பட்டது. அதின்படி குடும்பங்களுக்கு தேவையான அத்தியாவசியமான பொருட்களை வழங்கவும், யூத குழந்தைகளுக்கு கல்விக்கான உதவி செய்யவும் ஆரம்பித்திருக்கிறோம். நம் பரம தகப்பனின் இந்த பரம திட்டம் நிறைவேற தொடர்ந்து ஜெபியுங்கள் !

# நாள் 1



## ஞாயிற்றுக்கிழமை

## I. தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்!

- இந்த தேசத்திற்குக் கொடுக்கும்படிக்கு சுவிசேஷத்தின் இரகசியத்தை நான் உனக்கு அறிவிப்பேன். இது உன் வாயிலிருந்து புறப்படும்போது ஜனங்கள் ஆச்சரியப்படுவார்கள். திரளான யூதர்கள் திறந்த மனதோடு அதை ஏற்றுக் கொள்வார்கள். இது நிறைவேற ஜெபியுங்கள்.

- அனேக ஜனங்களுடைய இருதயத்தில் இந்த தேசத்தைக் குறித்த பாரத்தை நான் வைப்பேன். அவர்கள் உன்னோடு கூட இந்த தரிசனத்தில் இணைந்து கொள்வார்கள். அவர்களைக் கொண்டு ஒரு சுத்திகரிப்பை நிறைவேற்ற வேண்டும். அது என் ஆவியானவர் இறங்குவதற்கான ஆயத்தமான சுத்திகரிப்பாக இருக்கும். இது நிறைவேறஜெபியுங்கள்.

- “கர்த்தருடைய பட்சத்தில் நிற்பவன் யார்?” என்று அறைகூவல் விடுத்து அழைக்கும்போது, வலப் புறமும், இடப் புறமும், தெற்கிலும், மேற்கிலும், வடக்கிலும், கிழக்கிலும் இருந்து திரளான ஜனங்கள் புறப்பட்டு, உன் பட்சமாய் வந்து, உன் தரிசனத்திற்குத் துணை செய்வார்கள். இது நிறைவேற ஜெபியுங்கள்.

## II. எழுப்புதலுக்கு விரோதமான ஆவிகளைக் கட்டுங்கள்!

### 1. மோளேகு, காமோஸ், அஸ்தரோத்.

சாலமோன் காலத்தில் ஆராதனை பொருளாய் உள்ளே கொண்டு வைக்கப்பட்டதால் தேசம் தீட்டுப்பட்டது.

பாரம்பரியம் என்ற பெயரில் கர்த்தர் சொல்லாத காரியங்களை செய்ய வைக்கும் இந்த ஆவிகள் மிதிக்கப்பட வேண்டும்.

பண்டிகை என்ற பெயரில் தீட்டும், அருவருப்பும் அசுத்தமான காரியங்களை கொண்டு வருகிற இந்த ஆவிகள் நசுக்கப்பட வேண்டும்.

### 2. பொல்லாத மனிதர்கள் மூலம் கிரியை செய்யும் ஆவிகள்

கள்ளத்தனமான வார்த்தைகளை ஜனங்கள் நடுவே கொண்டுவர தீவிரிக்கும் ஆவிகள்– இந்த ஆவிகளை கடிந்து கட்டுங்கள்.

வானராக்கினியின் ஆராதனைகாரர்களுக்குள்ளே கிரியை செய்கிற ஆவிகளை கட்டுகள்.

### 3. யேசபேலின் ஆவிகள்.

அதிகாரம் உள்ளவர்களை தங்கள் கைகளுக்குள் வைத்து, கடுமையான சட்டங்களை கொண்டுவர முயற்சி பண்ணும் யேசபேலின் ஆவிகளை கட்டுங்கள்.

இரத்த வெறிப்பிடித்த இந்த ஆவிகள் இந்த தரிசனத்தை நிறைவேற்றுகிறவர்களின் ஜீவனுக்கு விரோதமாய் எழும்பவும், கால்களுக்கு கண்ணிகள் வைக்கவும் முயற்சி செய்கிறது. அவைகள் கட்டப்பட வேண்டும்.

## III. அண்டைய நாடுகளிலிருந்து கிரியை செய்கிற ஆவிகளைக் கட்டுங்கள்!

**எகிப்தின் அதிபதி**


'**அத்தாத் மிஷ் யேபெல்**'. (Attad Mish Ebel). எகிப்து தேசத்தின் மக்களை இஸ்ரேல் தேசத்தின் மேல் கசப்புணர்வைத் தூண்டும் ஆவி. சமாதானத்தைக் குலைத்து, இஸ்ரவேலர்களுக்கு எதிரான காரியத்தை நிறைவேற்றும்படி ஆலோசனை கொடுக்கிறது. எகிப்தின் அதிகாரத்தில் கிரியை செய்கிற ஆவி. இதை கட்டுங்கள்.

**தளபதி** - COMMANDER!

'**மன்யூஷி!**' (Manuzzi) என்கிற கொடிய கானானிய ஆவி இதற்குத் துணை போகிறது. தந்திரமான காரியங்களை நிறைவேற்றி, தேசத்தின் இறையாண்மைக்கு விரோதமாக, தேசத்தில் கர்த்தர் செய்யப்போகிற காரியங்களுக்கு விரோதமாக பல கொடிய காரியங்களை அரங்கேற்றுவதற்கு தன்னுடைய இருதயத்தில் நினைவு வைத்திருக்கிறது. இந்த கொடிய ஆவிகளை சங்கரித்துப் போடுங்கள்.

## IV. எருசலேம் மாவட்டத்திற்காக ஜெபியுங்கள்.

- தலைநகரம் எருசலேம். மக்கள் தொகை சுமார் 12.06 லட்சம். யூதர்கள் 8.22 லட்சம்.
- இந்த மாவட்டத்தில் இருக்கிற எல்லா மக்களும் இரட்சிக்கப்பட.
- இந்த மாவட்டத்திலிருக்கிற எல்லா திருச்சபைகளின் சுத்திகரிப்பிற்காக, எழுப்புதலுக்காக.
- வானத்திலிருந்து இறங்கி வருகிற பொல்லாத வான மண்டலத்தின் ஆவிகளுக்கு வாசலாக 7 ஏணிகளும், பாதாளத்திலிருந்து ஏறி



வருகிற பொல்லாத ஆவிகளுக்கு 7 வாசல்களும், பூமியில் கிரியை செய்கிற பிரபஞ்சத்தின் ஆவிகளுடைய வாசஸ்தலங்களாகிய 7 இடங்களும் இந்தப் பகுதியில் இருக்கிறது. இதன் வழியாக கிரியை செய்கிற பொல்லாத சத்துரு துரத்தப்பட வேண்டும். துரத்துங்கள்.

- அதிகாரத்தில் இருக்கிறவர்கள் மேல் கர்த்தருடைய ஆளுகை வர ஜெபியுங்கள்.

## V. தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்!





- "யூதர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படி சீக்கிரமே உன் கண்களைத் தொடுவேன். நாவைத் தொடுவேன்.' என்றும், அப்பொழுது கர்த்தருடைய ஆவியிலிருந்து புறப்படுகிற வார்த்தை, கர்த்தருடைய நாவிலிருந்து புறப்படுகிற வார்த்தை, யூதர்களுடைய இருதயத்தைக் குத்தும்." என்று சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்கு கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிறார். இது நிறைவேற ஜெபியுங்கள்.

- தீர்க்கதரிசி, சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்களை இத்தரிசனத்தோடு இணைத்ததற்காக தேவனைத் துதித்து, அவர்கள் மூலம் தேவ திட்டங்கள் வெளிப்படுத்தப்பட ஜெபியுங்கள்.





# நாள் 2

## திங்கள்கிழமை

## I. தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்!

- "என் நாமம் தரிக்கப்பட்ட திரளான சீனர்கள் இந்த தேசத்திற்குப் புறப்பட்டு வருவார்கள். என்னுடைய நாமத்தினால் இந்த ஜனங்களை குணமாக்குவார்கள். அவர்களுடைய கைகளிலே என் காயத்தின் அதிகாரத்தைத் தருவேன். எனக்கென்று பெரிய காரியத்தைச் செய்வார்கள்." ஜெபியுங்கள்.

- அமெரிக்கா தேசத்தார் அனேக திருச் சபைகளை கட்ட உதவி செய்வார்கள். சௌகரியவான்கள் திரளாய் எழும்பி, யூதர்களுடைய கைகளை பெலப்படுத்துவார்கள். யூதர்களுடைய இரட்சிப்பிற்குத் துணை செய்வார்கள். இங்கிலாந்து தேசத்திலிருந்தும், அறியாத அனேக இடங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் வந்து உனக்குப் பக்க பலமாக இருப்பார்கள். ஜெபியுங்கள்.

- இருண்ட தேசத்தாரிடமிருந்து என் வாயின் வார்த்தைகளும், உபதேசத்தின் சத்தியங்களும் புறப்படும். ஜெபியுங்கள்.

## II. எழுப்புதலுக்கு விரோதமான ஆவிகளைக் கட்டுங்கள்!

### 1. அஷேரா

பொல்லாத கிரியைகளுக்கு தாய் - மனித இரத்தத்தை பூமியில் சிந்தப்பண்ணி இரத்த வெறியினால் தன்னை பெலப்படுத்திக் கொள்கின்ற பொல்லாத ஆவி. இதை நிக்கிரகம் பண்ணுங்கள்.

### 2. லோதான்

வினோதமான காரியங்களை பேசி ஜனங்களை வஞ்சிக்கும். தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்க தக்க ஆற்றல் உடையது. எண்ணெய் கிணறுகளின் தேசங்களை குறி வைக்கும். இந்த தேசத்தின் கடல்களின் நடுவிலிருந்து புறப்படுகிற இந்த ஆவியை மடங்கடியுங்கள்.

### 3. யாங்

பூமியின் மரங்களை சேதப்படுத்தவும், பூமியின் விளைச்சல்களை கெடுத்துப் போடவும், திரளான மனிதர்களை கொள்ளையிடவும், நீர்நிலைகளில் விஷத்தை உண்டு பண்ணவும் கிரியை செய்கிற வஞ்சக ஆவி. மனிதர்களின் ஈரல் குலையை

பிடுங்கிப்போடும், குழந்தைகளின் இரத்தத்தால் தன்னை திருப்தியாக்கிக் கொள்ளும். பாதாளத்திலிருந்து ஏறிவரப்போகிற இந்த ஆவியை கட்டுங்கள்.

## III. அண்டைய நாடுகளிலிருந்து கிரியை செய்கிற ஆவிகளைக் கட்டுங்கள்!

**சிரியாவின் அதிபதி**

**ஹதாத் பேல் காடிஸ்.** (Haddad-Bel-Gadis)

ஆயுதங்களின் தேவன். (Lord of Weapons)

எப்பொழுதும் இஸ்ரேலுக்கு விரோதமான காரியங்களை நிறைவேற்றும்படி, இரண்டு தேசங்களுக்கிடையே பகையைத் தூண்டுகிறது. புதுப் புது ஆயுதங்களைக் கண்டுபிடித்து, குறைந்த விலையில் கொடுக்கிறது. கடிந்து ஜெபியுங்கள்.

**தளபதி** – COMMANDER!

**வா-ஹாப் நிகோல்** (Waah - Haab Nicole)

இந்தக் கொடிய ஆவி தளபதியாக செயல்படுகிறது. சிரியாவிலிருந்து கிரியை செய்து, இஸ்ரேல் மேல் பகையைத் தூண்டுகிறது. இரத்த வெறி பிடித்தது. சொந்த தேசத்தின் ஜனங்களைச் சூறையாடி, அவர்களின் இரத்தத்தைக் நக்குகிறது. கடிந்து ஜெபியுங்கள்.


## IV. 'ஹைஃபா' மாவட்டத்திற்காக ஜெபியுங்கள்!

**தலைநகரம்:** ஹைஃபா.
**மக்கள் தொகை:** சுமார் 11 லட்சம்.
**யூதர்கள்:** சுமார் 7.77 லட்சம்.

- இம்மாவட்டத்தில் வசிக்கிற மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

- எல்லாத் திருச்சபைகளின் சுத்திகரிப்பிற்காக, எழுப்புதலுக்காக எலியாவைப் போன்ற தேவ ஊழியர்கள் எழும்ப ஜெபியுங்கள்.

- இம்மாவட்டம் ஆசீர்வதிக்கப்பட, பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.



## V. தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்!





- பொல்லாத அதிகாரங்கள் மூலம் அச்சுறுத்தல்கள் வரும். சொந்த தேசத்தில் அழித்துப் போட முயற்சி செய்வார்கள். **Hit Listல்** பெயரைப் பதிவு செய்து, நாள் குறிப்பார்கள். உன் கால்களுக்குக் கண்ணி வைக்க முயற்சி பண்ணுவார்கள். ஆனாலும் என் சித்தம் இல்லாமல், உன்னுடைய ஒரு மயிர் கூட கீழே விழுவதில்லை. சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களின் பாதுகாப்பிற்காக, அவர்களுக்கு விரோதமாகத் திட்டமிடுகிற ஆவிகளின் கிரியைகள் கட்டப்பட ஜெபியுங்கள்.

- தீர்க்கதரிசி, சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்களின் பாதுகாப்பிற்காக, 'என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா?' என்று கோபங்கொண்டு எழும்புகிற ஆவிகளை கட்டி துரத்துங்கள்.





# நாள் 3
# செவ்வாய்கிழமை

## I. தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்!

- தேசத்தைத் தீட்டுப்படுத்தும்படி பிரபலமானவர்கள் எழும்பி, சில குறிப்பிட்ட மதத் தலைவர்களுடைய உதவியுடன், யூதர்களுக்கு நடுவில் இடறல்களைப் போடுவதற்கு முயற்சி பண்ணுவார்கள். சில பிலேயாம்கள் எழும்பி, அவர்கள் இந்த காரியத்தை நிறைவேற்றும்படி துணை செய்வார்கள். தடை செய்து ஜெபியுங்கள்.

- சிதறிப் போன என் ஜனங்களை எல்லா இடங்களிலிருந்தும் இந்த தேசத்திலே கொண்டு வந்து சேர்ப்பேன். அவர்கள் அதோடு கூட, 'என் காரியம் முடிந்தது?' என்று நினைக்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன்: "தேசத்திலே கூட்டிச் சேர்க்கப்பட்டவர்கள் என்னிடத்திலே சேர்க்கப்பட வேண்டும்." இதற்காக ஜெபியுங்கள்.

- தேசத்தின் மேல் ஒரு புதிய மழைப் பொழிவு உண்டாகப் போகிறது. அது, 'ஆரோக்கியம்!', 'விசுவாசம்!', 'மனந்திரும்புதல்' என்று சொல்லப்படும். சின்ன இடத்திலே சிறு பொறி போன்று தோன்றும். அது ஜனங்களுக்குள்ளே பரவ ஆரம்பிக்கும். அவர்கள் உன்னிடத்தில் வருவார்கள். இந்த வார்த்தை நிறைவேற ஜெபியுங்கள்.

## II. எழுப்புதலுக்கு விரோதமான ஆவிகளைக் கட்டுங்கள்!

### 1. யஸ்மோன்

கருவுருகிற பெண்களை குறிவைக்கும் ஆவி, கர்ப்பத்தில் இருக்கிற குழந்தைகளால் தன்னை பெலப்படுத்திக் கொள்கிற ஆவி, மனிதர்களில் அநேகருடைய மாம்சத்தை உருகி விழப்பண்ணும் இந்த ஆவியை கட்டுங்கள்.

### 2. ராஷேப்

வாலிபர்களை குறி வைக்கிற பொல்லாத ஆவி. விபச்சார மயக்கத்தை தூண்டுகிற ஆவி, மேலும் கொள்ளை நோய்களை பரப்புகிற இந்த ஆவியை துரத்துங்கள்.

### 3. எலியோன்

ராஜாக்களை, வியாபாரிகளை, ஐசுவரியவான்களை வஞ்சிக்கும் ஆவி. சபைகளுக்கு, ஊழியர்களுக்கு விரோதமாய் கிரியை செய்யும் இந்த ஆவியை கட்டுங்கள்.

## III. அண்டைய நாடுகளிலிருந்து கிரியை செய்கிற ஆவிகளைக் கட்டுங்கள்!

**யோர்தானின் அதிபதி**

**பலாத் அம்மோன்** (Ballad Ammon).
இந்த யோர்தானின் அதிபதியின்  கிரியைகளை கட்டுங்கள்.

**தளபதி** – COMMANDER!

- **மோட்** (Mott) என்கிற ஒரு ஆவி இதற்குத் துணை செய்கிறது.

- இரத்த வெறி பிடித்தது! ஜனங்களைக் கொள்ளையாடி, உடைமைகளைப் பாழாக்கி, பெருளாதாரத்தை அழிக்கிறதும், நிக்கிரகம் பண்ணுகிறதுமான கொடிய ஆவி. எருசலேமின் நன்மைக்கு விரோதமாக எப்பொழுதும் வன்மம் ஓதுகிறது. யுத்தம் செய்ய எத்தனம் பண்ணுகிறது. இது ஒரு விபச்சார ஆவி. கடிந்து கட்டப்பட வேண்டும்.


- நாம் இந்த தேசத்தில் காரியங்களைச் செய்ய முடியாதபடி குழப்பங்களை உண்டு பண்ண எத்தனம் பண்ணும். எழுப்புதல் தரிசனத்தில் உள்ள நம்மைக் குறி வைக்கிறது.

- தடைகளை உண்டு பண்ணி, திரும்பிப் போகப் பண்ணவும், தேசத்தில் அமளியான சூழ்நிலையை உண்டு பண்ணி, நுழைய முடியாதபடி கதவுகளை அடைக்கவும் கிரியை செய்கிறது.

- சேதங்களை உண்டு பண்ணும் ஆவி! சுற்றியிருக்கிற தேசங்களில் பகையை உண்டாக்கும். இந்த ஆவிகளைக் கட்டுங்கள்.

## IV. வடக்கு மாவட்டத்திற்காக ஜெபியுங்கள்!

**தலை நகரம்:** நாசரேத்.
**மக்கள் தொகை:** சுமார் 14.19 லட்சம்.
**யூதர்கள்:** சுமார் 6.96 லட்சம்.




- இந்த மாவட்டத்தில் வசிக்கிற மக்களின் மனக் கண்கள் திறக்கப்பட, இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

- இம்மாவட்டத்திலுள்ள எல்லா திருச்சபைகளிலும் எழுப்புதல் அக்கினி போடப்பட, திருச்சபைகள் சுத்திகரிக்கப்பட, தேவ ஊழியர்கள் வல்லமை பெற்றவர்களாக எழும்பிப் பிரகாசிக்க ஜெபியுங்கள்.

- இம்மாவட்டம் ஆசீர்வதிக்கப்பட, பாதுகாக்கப்பட, அண்டை நாடுகளால் எந்த விதமான ஆபத்தும் வராமலிருக்க ஜெபியுங்கள்.

## V. தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்!

- “சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களோடு இணைந்து, இந்த தரிசனத்தை நிறைவேற்ற பலவான்களை எழுப்புவேன்.” என்று தேவன் வாக்குப் பண்ணியிருக்கிறார். அவர்களைக் கண்டுபிடிக்கக் கூடிய கிருபைகளை தேவன் கொடுக்கவும், அப்படிப்பட்ட அழைப்புள்ளவர்களை தேவன் வெளிப்படுத்தவும் அவர்களைக் கொண்டு காரியங்கள் நிறைவேற்றப்படவும் ஜெபியுங்கள். அழைப்பைக் கெடுக்கிறவர்கள் அருகில் வராமலிருக்க ஜெபியுங்கள்.



- தீர்க்கதரிசி, சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்களுக்கு நல்ல சரீர சுகத்தையும், ஆரோக்கியத்தையும், புது பெலத்தையும் தேவன் அருள ஜெபியுங்கள்.





# நாள் 4
## புதன்கிழமை

## I. தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்!

- யூதர்கள் பின்பற்றுகிற அவர்களுடைய பாரம்பரியமான முறைகளிலே பொல்லாத தீட்டும், அசுத்தமும் கலந்திருக்கிறது. சாலமோன் காலத்தில் தீட்டுப்படுத்தப்பட்ட பல பழக்க வழக்கங்கள் உள்ளே நுழைந்திருக்கிறது. அதை 'மத வைராக்கியம்' என்று சொல்லி, அவைகளைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் துரத்தப்பட வேண்டும். மோளேகின் வித்து அழிக்கப்பட வேண்டும். அது உங்கள் ஜெபத்தினால் சாத்தியமாகும். அப்பொழுது இவர்கள் கண்கள் திறக்கப்படும். ஜெபியுங்கள்.

- இந்த அழைப்பிலே பங்கு பெறும்படி இன்னும் அனேக செளகரியவான்களையும், பலவான்களையும் வைத்திருக்கிறேன். சில வருடங்களுக்கு முன்பதாகவே தரிசனம் பெற்றிருக்கிறார்கள். இன்ன இடத்திலிருந்து ஒருவன் எழும்பி, "யூதர்களுக்கு, இரட்சிக்கப்படுகிற காலம் வருகிறது.' என்று சொல்வான்." என்று அவர்களோடு பேசியிருக்கிறேன். அப்பொழுது நான் ஆயத்தப்படுத்தின ஜனங்கள் உன்னிடத்தில் திரளாய் கடந்து வருவார்கள். இது நிறைவேற ஜெபியுங்கள்.

- 'பாரம்பரியம்' என்கிற சாபம் இவர்கள் மேல் இருக்கிறது. இவர்களுடைய கண்களை குருட்டாட்டம் பிடிக்கப் பண்ணுகிறது. இது நீக்கப்பட்டால், இவர்களுடைய கண்கள் துலாம்பரமாகும். இந்த ஆவிகளை முறியடித்தால், இவர்களுடைய பாரம்பரியத்தைப் பரிசுத்தப்படுத்துவேன். பாஷையைப் பரிசுத்தப்படுத்துவேன். ஆராதனையைப் பரிசுத்தப்படுத்துவேன். கலாச்சாரத்தை பரிசுத்தப்படுத்துவேன். பாரம்பரிய ஆவிகளை முறியடியுங்கள்.

## II. எழுப்புதலுக்கு விரோதமான ஆவிகளைக் கட்டுங்கள்!

### 1. அபத்தோன்

வானமண்டலத்தில் இருக்கிற இந்த பொல்லாத ஆவியின் தலைமையில் 40 லேகியோன் அளவுக்குண்டான பெரும் படைத் திரள் இறங்கி வருகிறதற்கு ஆயத்தமாய் இருக்கிறது. பூமியில் இறங்க எருசலேமை வாசலாக வைத்திருக்கிறது. இவைகளை முந்திக் கட்டுங்கள்.

### 2. ஆமோன்

பிரபஞ்சத்தின் ஆவியிலே பிரதானமான பொல்லாத ஆவி. மனிதர்களை வஞ்சிக்கிற ஆவி. எருசலேமுக்கு விரோதமாய் கிரியை செய்து சுற்றியிருக்கிற அநேக தேசங்களில் உள்ள ராஜாக்கள், அதிகாரிகள் இதயங்களில் பேசி

அவர்களை ஒரு அணியில் திரட்ட கிரியை செய்யும்படி புறப்பட்டு வரப்போகிறது. இதை முந்திக் கட்டுகள்.

### 3. பெஹிமோத்

சமுத்திரத்தின் ஆழத்திலிருக்கிற ஒரு வாசல் வழியாக புறப்படுகிற பாதாளத்தின் பலவான். எருசலேமிற்கு விரோதமாக ஜனங்களை திரட்டவும், கொடியவர்கள், பயங்கரவாதிகள், மனித உயிர்களை வேட்டையாடுகிறவர்களை ஒன்று திரட்ட இந்த ஆவி புறப்பட்டு வருகிறது. இது கட்டப்பட்டால் யூதாவின் கண்கள் திறக்கப்படும். கர்த்தரிடத்தில் திரும்புவார்கள்.

## III. அண்டைய நாடுகளிலிருந்து கிரியை செய்கிற ஆவிகளைக் கட்டுங்கள்!

**லெபனானின் அதிபதி**

**ஈஷ்முன் – எல் – காத்** (Eashmun - El - Gadd)

இது நெருப்பின் கடவுள் (Lord of fire). இது ஒரு கானானிய ஆவி. இரத்தம் குடிக்கத் துடிக்கும் ஆவி.

**தளபதி** – COMMANDER!

**ஷாட் – அர்ஃபா** (Shadd - Arpha). இது இராணுவங்களை இயக்குகிற, கட்டுப்படுத்துகிற ஆவி. இதற்குக் கட்டளையிட்டால், இராணுவத்தை அனுப்பி, எவ்வளவு கொடூரமான சண்டையாக மாற்ற முடியுமோ, அவ்வளவு தூரம் இராணுவத் துறையிலிருந்து அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும்.

## IV. டெல் அவிவ் மாவட்டத்திற்காக ஜெபியுங்கள்!

**தலைநகரம்:** டெல் அவிவ்.
**மக்கள் தொகை:** சுமார் 15 லட்சம்.
**யூதர்கள்:** சுமார் 14.15 லட்சம்.

- இந்த மாவட்டத்தின் மக்களின் மனக் கண்கள் திறக்கப்பட, எல்லா மக்களும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

- இம்மாவட்டத்திலுள்ள எல்லா திருச்சபைகளிலும் எழுப்புதல் அக்கினி போடப்பட, திருச்சபைகள் சுத்திகரிக்கப்பட, தேவ ஊழியர்கள் வல்லமை பெற்றவர்களாக எழும்பிப் பிரகாசிக்க ஜெபியுங்கள்.



• டெல் அவிவ் பட்டணத்தில் வருடந்தோறும் நடைபெறும் ஓரினச் சேர்க்கையாளர்கள் பேரணி தடை செய்யப்பட வேண்டும். விபச்சார ஆவிகளின் கிரியைகள் கட்டப்பட ஜெபியுங்கள்.

## V. தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்!

• சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காக ஜெபியுங்கள். “உன்னுடைய வரங்களை நான் புதுப்பித்து, என் காரியங்களை நிறைவேற்றும்படி பலவானின் ஆவியையும், ஞானத்தின் ஆவியையும் உனக்குள்ளே வைத்து, என் பாரத்தைப் பற்றிக் கொள்ளும்படிக்கான எரிகிற நெருப்பை உன்னுடைய இருதயத்திற்குள்ளே பதித்து வைக்கப் போகிறேன்.” இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்.





• தீர்க்கதரிசி, சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்களையும் இதுவரை இல்லாத தம்முடைய அபிஷேகத்தினாலும், கிருபையினாலும், பெலத்தினாலும் கர்த்தர் நிரப்ப ஜெபியுங்கள்.





# நாள் 5
# வியாழக்கிழமை

## I. தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்!

- “இஸ்ரவேலே, உன்னைத் தள்ளி விடுவேனோ? உன்னை பயில் காட்டி அழைத்து, என்னிடத்தில் சேர்த்து, என் மார்பில் இளைப்பாறவும், உன்னுடைய ஸ்தானத்தில் வந்து சேரவும், உன்னை செழிக்கப் பண்ணி, மறுபடியும் என்னிடத்தில் கூட்டிச் சேர்ப்பேன். இஸ்ரவேலர்களுக்கு நடுவிலே எனக்கென்று ஆயத்தமாகிற திரள் கூட்டம் உண்டாயிருக்கிறது. வருகிற எழுப்புதலிலே அனேகர் சந்திக்கப்பட்டு, எனக்கென்று வேறு பிரிக்கப்பட்டு என்னோடு இணைக்கப்படுவார்கள். அது சாத்தியமாகும். நிறைவேற ஜெபியுங்கள்.

- “வெகு சீக்கிரமே இந்த தேசத்திற்கு விரோதமாக யுத்த மேகம் எழும்பும். பல தேசங்கள் இவர்களுக்கு விரோதமாய் அணி திரள்வார்கள். எருசலேம் யாவருக்கும் முன்பாக கனமான பாரமான கல்லாக மாற்றப்படும். தீவிரவாதிகள் அணி திரண்டு எருசலேமின் அலங்கத்திற்கு விரோதமாய் முற்றிகை போடும் காலம் வருகிறது. நீங்கள் ஜெபத்தை விதைத்தால், யூதருடைய கண்களைத் திறப்பேன். சிங்கத்தைப்போலப் புறப்பட்டு, சத்துருக்களை முறியடிப்பேன். ஜெபியுங்கள்.

- “உலகத்தின் அதிபதிகள் எழும்பி, பொல்லாதவர்களின் இருதயங்களை நிரப்பி, 11 விதமான ஜனங்கள் கொண்ட 11 தீவிரமான தேசங்களும், அமைப்புகளும் கூடிக் கொண்டு இந்த தேசத்திற்கு விரோதமாக கடந்து வரப் போகிறார்கள். இவர்களை நடத்த ஒருவன் தலைவனைப்போல, ராஜாவைப் போலப் புறப்பட்டு வரப் போகிறான்.” அதற்கு முன் நீ எழும்பி தடை செய்.

## II. எழுப்புதலுக்கு விரோதமான ஆவிகளைக் கட்டுங்கள்!

### 1. ஆந்தரோ பேலியஸ்

நீங்கள் முந்திக் கட்டவேண்டிய உலகத்தின் அதிபதி இவன்தான். கர்த்தரின் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்களை பாதையிலிருந்து வழிவிலகப் பண்ணவும், மாம்ச இச்சை, பொருளாசை, விக்கிரக ஆராதனை, மதிமயக்கத்தை தூண்டி அவர்களை கர்த்தருடைய கட்டளைகளை விட்டு பின்வாங்க செய்வது இதன் நோக்கம்.

எருசலேமை துளிர்க்க விடுவதில்லை. யூதாவை மறுபடியும் எழும்ப விடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. இதன் தலையை நசுக்குங்கள்.

### 2. பேரியத்

இந்த கொடிய ஆவி இந்த ஸ்தலத்திலே ஜனங்களை வஞ்சிக்கும்படிக்கு பூரணமாய் சுற்றித் திரிகிறது. அதன் வல்லமை கட்டப்பட வேண்டும்.

### 3. பெயல் செபூல்

இஸ்ரவேல் தேசத்தை பிளவுபடுத்தவும், தேசத்திலே இரத்தத்தை சிந்த வைக்கவும், அநேக தேசங்களையும், தீவிரவாதிகளையும் இந்த தேசத்தை நோக்கி புறப்பட்டு வரப்பண்ணவும், பாலைவனப் புயல் என்று சொல்லுகின்ற பொல்லாத மனிதர்களை இந்த தேசத்திற்குள்ளே நுழையப்பண்ணவும் , இந்த தேசத்தை எப்பொழுது பழி தீர்க்கலாம் என்று காத்திருக்கிற பொல்லாத ஆவியாகிய பெயல் செபூல் முந்திக் கட்டப்பட வேண்டும்.

## III. அண்டைய நாடுகளிலிருந்து கிரியை செய்கிற ஆவிகளைக் கட்டுங்கள்!

**ஈராக்கின் அதிபதி**

**மோலோக் மெல் காட்** (Moloch - Melcart)

இது, வெள்ளத்தின் கடவுள் (**Lord of Floods**). அதாவது, துன்மார்க்கரின் கூட்டம். இதன் பூர்வப் பெயர், '**Dhoo geddan**'.

**தளபதி** – COMMANDER!


**யார்கின்** (Yarkin). இதன் கிரியைகளைக் கடிந்து கட்டுங்கள்.

## IV. மத்திய மாவட்டத்திற்காக ஜெபியுங்கள்!

**தலைநகரம்:** ரமலா.
**மக்கள் தொகை:** சுமார் 21.43 லட்சம்.
**யூதர்கள்:** சுமார் 19.37 லட்சம்.

- இந்த மாவட்டத்திலுள்ள மக்களின் மனக் கண்கள் திறக்கப்பட, எல்லா மக்களும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

- இம்மாவட்டத்திலுள்ள எல்லா திருச்சபைகளிலும் எழுப்புதல் அக்கினி போடப்பட, திருச்சபைகள்



சுத்திகரிக்கப்பட, தேவ ஊழியர்கள் வல்லமை பெற்றவர்களாக எழும்பிப் பிரகாசிக்க ஜெபியுங்கள்.

- இம்மாவட்டம் ஆசீர்திக்கப்பட, பாதுகாக்கப்பட, விளை நிலங்கள் செழிக்க ஜெபியுங்கள்.

## V. தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்!



- சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காக ஜெபியுங்கள்! "நீ அறியாத அனேக புதிய முறையிலான வசதிகளை நான் உனக்குத் தருவேன். நவீன காரியங்களைப் பயன்படுத்திக் கொள்ளும்படிக்காக, அவைகளை உன் கைகளிலே கொண்டு வந்து கொடுக்கும்படிக்கு, என்னால் பயிற்றுவிக்கப்பட்ட பாரம் நிறைந்த ஊழியர்களைத் தருவேன். யூதர்களின் ஜென்ம பாஷைகளிலே இரட்சிப்பின் வார்த்தைகளை அனுப்பும்படிக்கான வசதிகளை உனக்குத் தரப் போகிறேன்." தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்.

- தீர்க்கதரிசி, சகோ. **வின்செண்ட் செல்வகுமார்** அவர்களுக்காக, பரிசுத்த ஆவிக்குள் நிரம்பி ஜெபியுங்கள். ஆவியானவர் வழிநடத்துகிறபடி ஜெபியுங்கள்.



# நாள் 6

# வெள்ளிக்கிழமை



## I. தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்!

- “தேசத்தின் நடுவில் இழந்த சீரை திரும்பக் கொண்டு வருவேன். பழ வர்க்கங்களினாலும், கனி வர்க்கங்களினாலும் மிகுந்த ஆஸ்தியைக் கொண்டு வருவேன். தேசத்தின் ஆழங்களிலிருக்கிற ஐசுவரியங்களை வெளிப்படப் பண்ணுவேன். நிலங்கள் நன்மையைக் கொடுக்கிற நிலங்களாக மாற்றப்படும். புதிய ஆறுகள், புதிய நீரூற்றுகள், புதிய சுனைகளை எழும்பப் பண்ணுவேன்.” ஜெபியுங்கள்.

- இந்த தேசத்தின் பூமிக்குக் கீழே, மலைகளுக்குள்ளே, கற்பாறைகளுக்கு நடுவிலே நிரளான ஆஸ்திகளையும் நானே வெளிப்பட பண்ணி தேசத்தினுடைய ஸ்தானத்தை உயர்த்துவேன். அவர்கள் கையிட்டு தொடுகிற இடத்திலெல்லாம் பொன்னும், நவமணிகளும் விளைகிறதைக் கண்டு தூரமாய் போனவர்கள் இந்த தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். நிறைவேற ஜெபியுங்கள்.

- தேசத்தின் வனாந்திரங்கள் செழிக்கப் போகிறது. பாழான இடங்கள் எழும்பப் போகிறது. புதிய பட்டணங்கள் நிர்மாணிக்கப்படப் போகிறது. எல்லைகள் விஸ்தாரமாகப் போகிறது. இழந்த பகுதிகள் திருப்பப்படப் போகிறது. சத்துருக்கள் துரத்தப்படப் போகிறார்கள்.” கர்த்தரின் வார்த்தை நிறைவேற ஜெபியுங்கள்.

## II. எழுப்புதலுக்கு விரோதமான ஆவிகளைக் கட்டுங்கள்!

### 1. சோராத்

அந்தி கிறிஸ்துவின் ஆவியை உடையவன். ஜனங்கள் யாவரையும் ஒன்றுதிரட்டவும், அனைவருடைய கைகளிலும் நெற்றிகளிலும் தன்னுடைய இலக்கத்தை முத்திரையிடவும், அநேகர்மேல் நாசியின் சுவாசத்தை ஊதி அவர்களை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைக்கவும், பரிசுத்தவான்களின் இரத்தத்தை திரளாய் சிந்தப்பண்ணவும், இதற்கான திட்டங்களை தீட்டப்போகின்ற சோராத் என்கின்ற அந்தி கிறிஸ்துவின் ஆவி முந்தி கட்டப்பட வேண்டும்.

### 2. நேக்கோல்

தீவினைகளைப் பிணைக்கும்படி கற்பிக்கிற ஆவி. வறண்ட இடத்திலும், மனித சஞ்சாரம் இல்லாத இடத்திலும் உள்ள ஆவிகளை கண்டுபிடித்து அவைகளுக்கு தீவினையை கற்பிக்கிற, பலப்படுத்துகிற பொல்லாத ஆவி நேக்கோல். இந்திய தேசத்திலிருந்து எருசலேமிற்கு புறப்பட இருக்கிற இந்த ஆவி முந்தி கட்டப்பட வேண்டும்.

### 3. மேத்தேசூர்

மேத்தேசூர் என்கின்ற இந்த பொல்லாத ஆவி இரத்த வெறி கொண்ட ஆவி. மனிதர்களை கண்டால் குதறி போடுகின்ற ஆவி, வெறி கொண்ட மிருகத்தை போன்றதும், மனிதர்களுக்குள்ளே வெறியை தூண்டுகிறதுமான இந்த பொல்லாத ஆவியை துரத்துங்கள்.

## III. அண்டைய நாடுகளிலிருந்து கிரியை செய்கிற ஆவிகளைக் கட்டுங்கள்!

**சவுதி அரேபியாவின் அதிபதி**

**காதேஷ் – அஷ் – அப்பான்** (Quadesh -Ash - Abbon).


இது சர்ப்பங்களின் கடவுள் (Lord of Snakes). இந்த பாலைவனப் பாம்புகளை மிதியுங்கள்.

**தளபதி** – COMMANDER!

**மல்லேக்கியேல் – பாயேல்** (Mal - Ekiel - Bayel) தீவிரமாய் ஜெபித்துக் கட்டுங்கள்.

## IV. தெற்கு மாவட்டத்திற்காக ஜெபியுங்கள்!

**தலை நகரம்:** பெயர்செபா.
**மக்கள் தொகை:** சுமார் 12.61 லட்சம்.
**யூதர்கள்:** சுமார் 10.34 லட்சம் .




- இந்த மாவட்டத்திலுள்ள மக்களின் மனக் கண்கள் திறக்கப்பட, எல்லா மக்களும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

- இம்மாவட்டத்திலுள்ள எல்லா திருச்சபைகளிலும் எழுப்புதல் அக்கினி போடப்பட, திருச்சபைகள் சுத்திகரிக்கப்பட, தேவ ஊழியர்கள் வல்லமை பெற்றவர்களாக எழும்பிப் பிரகாசிக்க ஜெபியுங்கள்.

- இம்மாவட்டம் ஆசீர்திக்கப்பட, பாதுகாக்கப்பட, விளை நிலங்கள் செழிக்க ஜெபியுங்கள்.

## V. தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்!



- சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காக ஜெபியுங்கள். "நான் இன்னும் உன்னை பூரண பெலத்தால் நிரப்பி, மோசேயை என் கைக் கோல்களினால் நான் ஆசீர்வதித்ததைபோல, அவனை நான் சீனாய் மலையிலே சந்தித்ததைப்போல, அவனுடைய முகத்தை நான் பிரகாசிக்கப் பண்ணியதைப்போல, ஞானத்தையும், புத்தியையும் அவனுக்குள்ளே நான் கொண்டு வந்து சேர்த்ததைப்போல செய்வேன்." நிறைவேற ஜெபியுங்கள்.

- தீர்க்கதரிசி, சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்களை இன்னும் கர்த்தர் பெலப்படுத்தவும், எலியாவின் மேலிருந்த தேவ கரம் சகோதரர் அவர்கள் மேலிருக்கவும், அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களுடைய ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.





# நாள் 7

## சனிக்கிழமை

## I. தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்!

- "மறைந்திருக்கிற இடங்களை வேதாகமம் காண்பித்து, வேதாகமம் வெளியே புறப்பட்டு வரவும், ஏற்கெனவே ஜனங்களுக்குத் தந்ததும், மறக்கப்பட்டதும், மறைந்து போயிருக்கிறதுமான வார்த்தைகளை வெளியே கொண்டு வந்து, ஜாதிகள் அதைப் பார்க்கும்படி கிரியை செய்வேன். அவர்கள் மறந்து போன பாஷையை மறுபடியும் வெளிப்படப் பண்ணுவேன். ஜெபியுங்கள்.

- "இதோ, என் தேசத்தின் ஜனங்கள் சிறைப்பட்டும், அனேக இடங்களில் அந்தந்த தேசங்களில் சம்மந்தம் கலந்து புறப்படக் கூடாமல் இருக்கிறவர்கள் நேராக தேசத்தை நோக்கிப் புறப்படும்படி அசீரியருடைய பட்டணங்களில் இருந்தும், அடிமைப்பட்டிருக்கிற பல பகுதிகளிலிருந்தும் எருசலேமுக்கு வருகிற பாதைகளை செவ்வை பண்ணிக் கொடுப்பேன். பவுஞ்சு பவுஞ்சாய் கடந்து வருவார்கள்." நிறைவேற ஜெபியுங்கள்.

- தூர இடத்திலுள்ள தேசங்கள், வட திசையில் இருக்கிற தேசங்கள் ஒன்று கூடி, தேசத்திற்கு விரோதமாக பட்டயத்தை எழுப்பும்படியான காரியங்களைத் திட்டமிடுகிறார்கள். இந்த தேசத்திற்கு விரோதமாகக் கிரியை செய்யும்படி வலுசர்ப்பத்தின் தேசமும் புறப்பட்டு வரும்." நீங்கள் முந்தி எழும்பிக் கட்டுங்கள்.

## II. எழுப்புதலுக்கு விரோதமான ஆவிகளைக் கட்டுங்கள்!

### 1. எனேப்சிகாஸ்

அஸ்தரோத்திற்குத் துணை நிற்கிற பொல்லாத விக்கிரக ஆவி. இது ஒரு நம்பூசக ஆவி. அண்ணக ஆவி. அனேக அண்ணகர்கள் இந்தப் பகுதியில் சுற்றித் திரிந்து, பெண்களையும், குழந்தைகளையும் வஞ்சித்து, கொலை செய்து, அவர்களுடைய இரத்தத்தை தண்ணீரில் கலந்து பானம் பண்ணி, அவர்களை சுட்டெரித்து, சாம்பலை நெற்றிகளில் பூசி கோலாகலமாய் கொண்டாடின நாட்கள் உண்டு. இந்த ஆவி மறுபடியும் எழும்ப முயற்சி பண்ணுகிறது. ஆள்கிறவர்களைக் குறி வைக்கிறது, ஓரினச் சேர்க்கையாளர்களைக் குறி வைக்கிறது. கர்த்தருடைய ஆராதனைக் கூடங்களையும் குறி வைக்கிறது. கட்டுங்கள்.

### 2. பாலைவனப் பாம்புகள்

யுத்த வீரர்களை கவிழ்க்கப் பண்ணும், மண்ணுக்குள்ளே பதிந்திருக்கும் கொடிய பாலைவனத்து சிறிய அளவான பாம்புகள் கண்ணியாக விதைக்கப்பட்டிருக்கிறது. பாலைவன சர்ப்பங்களை மிதியுங்கள்.

### 3. கொடிய ஆயுதங்களைப் பயன்படுத்தும் ஆவிகள்!

கண்ணுக்குத் தெரியாத விதத்திலே கொடிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, கொள்ளை நோய்களையும், பயிர் நிலங்கள் பாதிக்கப்படும்படியான கிரியைகளைச் செய்யவும், பொருளாதாரத்தை சீர்குலைக்கும்படிக்கான காரியங்களைச் செய்கிற ஆவிகளைக் கட்டுங்கள்.

## III. அண்டைய நாடுகளிலிருந்து கிரியை செய்கிற ஆவிகளைக் கட்டுங்கள்!

**காஸா பகுதியின் அதிபதி**

**ஷாலிம் நிக் பாஷ்** (Shalim -Nic - Bash)

இது புகைகளின் கடவுள் – Lord of Smoke

**தளபதி** – COMMANDER!

**சைடிக் மிஸோர்** (Sydyk - Missor)

**அட்வார் மெல்தோன்** (Adwar - Melthon)

கானானிய ஆவிகளில் கொடூரமானது. மனிதாபிமானமற்ற காரியங்களை அரங்கேற்றும் இரத்த வெறி பிடித்த இந்த ஆவிகளைக் கட்டுங்கள்.

## IV. யூதேயா & சமாரியா


(ஐக்கிய நாடுகள் சபையால் அங்கிகரிக்கப்படவில்லை)

**மக்கள் தொகை:** சுமார் 5 லட்சம்.
**யூதர்கள்:** சுமார் 4.40 லட்சம்.

- இந்த மாவட்டத்திலுள்ள மக்களின் மனக் கண்கள் திறக்கப்பட, எல்லா மக்களும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

- இம்மாவட்டத்திலுள்ள எல்லா திருச்சபைகளிலும் எழுப்புதல் அக்கினி போடப்பட, திருச்சபைகள் சுத்திகரிக்கப்பட, தேவ ஊழியர்கள் வல்லமை பெற்றவர்களாக எழும்பிப் பிரகாசிக்க ஜெபியுங்கள்.

- இம்மாவட்டம் ஆசீர்திக்கப்பட, பாதுகாக்கப்பட, விளை நிலங்கள் செழிக்க ஜெபியுங்கள்.



## V. இந்த தரிசனத்தில் இணைந்திருக்கிறவர்களுக்காக ஜெபியுங்கள்!

• ஜெபிக்கிறவனுடைய நாவிலே அக்கினியினாலும், வல்லமையினாலும் நிறைந்த அபிஷேகம். அவனுடைய நாவிலிருந்து புறப்படுகிற வார்த்தை, அக்கினியாஸ்திரங்களைக் காட்டிலும் வல்லமையுள்ளதாக இருக்கிறது.

• அக்கினி மயமான பாஷை, இடி முழக்கம் போன்ற சத்தம், திறக்கப்பட்ட ஆவிக்குரிய கண்கள். இந்த தரிசனத்தில் இணைந்திருக்கிற அத்தனை பேரையும் கர்த்தர் இப்படிப்பட்ட கிருபைகளால் நிரப்ப ஜெபியுங்கள். முடிவு பரியந்தம் இந்த தரிசனத்தில் ஒவ்வொருவரும் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.




SPIRITUAL MAPPING OF ISRAEL
EGYPT
ATTAD MISH EBEL
COMMANDER
MANUZZI
GAZA
SHALIM - NIC - PASH
COMMANDER
SYDYK - MISSOR
ARMY LEADER
ADWAR - MELTHON
LEBANON
EASHMUN - EL - GADD
Lord of Fire
COMMANDER
SHADD - ARPHA
ISRAEL
JORDAN
BALLAD AMMON
COMMANDER
MOTT
SYRIA
HADDAD - BELGADIS
Lord of Weapons
COMMANDER
WAAH - HAAB NICOLE
IRAQ
MOLOK - MELCART
(DHOOGEDDAN)
Lord of Floods
COMMANDER
YARKHIN
SAUDI ARABIA
QUADESH - ASH - ABBON
Lord of Snakes
COMMANDER
MAL - EKIEL - BAYEL
FOR PRAYER PURPOSE ONLY
Alexandria
Cairo
Port Said
Asyut
Sohag
Qena
Luxor
Herodotus Basin
Lefkosia (Nicosia, Lefkosia
Antalya
Antalya Basin
Mersin
Adana
Beirut
Damascus
Jerusalem (Yerushalayim, Al Quds)
Aleppo
Gaziantep
Euphrates
S Y R I A
TABUK
Al Jawf
NORTHERN BORDERS
Irbil
Kirkuk
As Sulaymaniyah
Sanandaj
Kermanshah
Khorramabad
Basra
KUWAIT
Tigris
Orumiyeh
Lake Urmia

## ISRAEL STATE DEMOGRAPHY

# இஸ்ரவேல் தேசத்தின் மக்கள் தொகை

# 90.62 லட்சம்.

## இஸ்ரவேல்

**6 மாவட்டங்கள்**

**6 தலை நகரங்கள்**

**யூதர்கள்**

**71.21 லட்சம்**

**01**
வடக்கு மாவட்டம்
நாசரேத்து
14.19 லட்சம்
யூதர்கள் - 6.96 லட்சம்

**02**
மத்திய மாவட்டம்
ரமலா
21.43 லட்சம்
யூதர்கள் - 19.37 லட்சம்

**03**
ஹைஃபா மாவட்டம்
ஹைஃபா
11 லட்சம்
யூதர்கள் - 7.77 லட்சம்

**04**
தெற்கு மாவட்டம்
பெயர்செபா
12.61 லட்சம்
யூதர்கள் - 10.34 லட்சம்

**05**
எருசலேம் மாவட்டம்
எருசலேம்
12.06 லட்சம்
யூதர்கள் - 8.22 லட்சம்

**07**
டெல் அவிவ் மாவட்டம்
டெல் அவிவ்
14.97 லட்சம்
யூதர்கள் - 14.15 லட்சம்

யூதேயா
சமாரியா மாவட்டம்
5 லட்சம்
யூதர்கள் - 4.40 லட்சம்

உலக நாடுகளால் அங்கீகரிக்கபடவில்லை

# இயேசுவே, இஸ்ரேலை இரட்சியும்!




For more Details:

**Jesus Redeems Ministries,**

Nalumavadi - 628 211. ,

Thoothukudi Dist.,

Ph: 8300186000, 8144992299

*This Map is not to Scale, For prayer Purpose only...*